நாள் : 20.08.2019 - செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண் : 58/2018

வாதி தரப்பு சாட்சி : வா.சா.1

பெயர் : திரு. பி.டி.அப்பையா

தகப்பனார் பெயர் : தேவைய்யா B.K.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 2016-ம் ஆண்டு மேற்படி நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன். பிரதிவாதி எந்த தேதியில் எங்களது நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி எந்த தேதியில் நிரந்தர தொழிலாளராக நியமனம் செய்யப்பட்டார் என்பதும் எனக்கு தெரியாது. தொழிலாளர்கள் கொடி மரம் நடுவது அவர்களது உரிமை, கடமை என்றால் அதுபற்றி எனக்கு தெரியும். ஆனால் பிரதிவாதி 13 காப்பிச்செடிகளை வெட்டி கொடியை நட்டதினால் தான் பிரச்சனை ஏற்பட்டது. கொடி மரம் வைப்பதற்கு எங்களது நிறுவனத்தில் அனுமதி கேட்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. 30-12-2017-ம் தேதியிட்டு பிரதிவாதி 7 அம்ச கோரிக்கைகள் வைத்து எங்களது நிறுவனத்திற்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்றால் இருக்கலாம். 31-12-2018-ம் தேதியிட்டு பிரதிவாதி 5 அம்ச கோரிக்கைகள் வைத்து எங்களது நிறுவனத்திற்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்றால் இருக்கலாம். 12-2-2018-ம் தேதி தோட்ட நிர்வாக ஆய்வாளர் பிரதிவாதி கொடுத்த மனுவின் பேரில் என்னிடம் விசாரித்தார். செடி வெட்டிய தினத்தன்றே கொடி மரமும் நாட்டப்பட்டது. அன்றைய தினம் வேலை நாள். 6-2-2018-ம் தேதி செடிகளை வெட்டியதாக பிரதிவாதிக்கு ஷோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் 12.30 மணியளவில் செடிகளை வெட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அன்றைய தினம் 1.30 மணியளவில் செடிகளை வெட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற பின்னிட்டு தான் ஷோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கப்படும். நாங்கள் கொடுத்த ஷோக்காஸ் நோட்டீஸில் ஜனவரி-6-2018

என்று சம்பவ தேதிக்கு முன்பே நடைபெற்றதாக ஷோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேதி தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் பிரதிவாதி எத்தனை செடிகளின் எண்ணிக்கை என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. துணை மேலாளர் தான் புகார் கொடுத்தார். துணை மேலாளர் அவரது சாட்சித்தில் 33 செடிகள் வெட்டப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சாட்சியத்தில் 13 செடிகள் வெட்டியதாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் 13 செடிகள் காய்ப்பதற்குரிய செடிகள். மற்ற செடிகள் சிறு செடிகளாக இருக்கலாம். நாங்கள் கணக்கு காண்பிப்பது 13 செடிகள். அன்றைய தினம் 3 மேலாளர்கள், 3 கள மேலாளர்கள் இருந்தார்கள். 1 வாட்ச்மேன் இருந்தார். வாட்ச்மேன் பெருமாள் பணியில் இருந்தார். வாட்ச்மேனுக்கு குறிப்பிட்டு கால நேரம் எதுவும் இல்லை. 1 மணி நேரம் சாப்பிடுவதற்கு எடுத்துக்கொள்ளலாம். வாட்ச்மேன் அத்தனை காடுகளையும் சுற்றி பார்ப்பது மற்றும் செடிகள் வெட்டப்பட்டுள்ளதா, செடிகள் திருடு போயுள்ளதா என்பதை மேற்பார்வை செய்வார். சம்பவ தினத்தன்று சுற்றி பார்க்க சென்றாரா என்று எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து எங்களது நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்ற வகைக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 27-ம் எண் காட்டில் மொத்தம் எத்தனை செடிகள் உள்ளது என்றால் அந்த இடம் 27 ஹெக்டேர் அளவுடையது. மொத்தம் எத்தனைச் செடிகள் என்று அளவிடவில்லை. நிறுவனத்திற்கு சொந்தமாக காலி நிலத்திற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ஆவணங்கள் உள்ளது தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். பிரதிவாதியும், அவரது ஆட்களும் சேர்ந்து கொடியை நட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அந்த ஆட்கள் யார் என்று தெரியாது. 13 அரபிக்கா செடிகளை வேர் பகுதியை விட்டு விட்டு மற்ற பகுதிகளை பிரதிவாதி வெட்டிவிட்டார். அந்த புகைப்படம் எனது வசம் உள்ளது. தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்ய

--3-

தயாராக இருக்கிறேன். புகைப்படம் இருக்கும் பட்சத்தில் நான் தாக்கல் செய்திருப்பேன். அவ்வாறு இல்லாத காரணத்தினால் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. செடிகள் வெட்டப்பட்ட விபரம் குறித்து கள மேலாளர் குமார் எனக்கு தகவல் சொன்னார். கள மேலாளருடன் மற்ற சிலர் நபர்களும் இருந்தார்கள். அவர்களையும் பிரதிவாதி தகாத வார்த்தைகளால் திட்டினார். அவர்கள் பெயரை நான் குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. தவறான செய்தினை பரப்பியதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது. எந்தவகையான தவறான செய்தினை பரப்பினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் தகாத வார்த்தைகளாலும், கொலை மிரட்டலும் விடுத்தார். கொடி மரம் வைக்கப்பட்டுள்ள எங்களது நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டதற்கு என்ற வகைக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி எந்தவிதமான செடிகளை வெட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கொடி மரம் வைத்ததால் அவர் மீது செடிகளை வெட்டியதாக பொய் வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நாங்களே செடிகளை வெட்டிவிட்டு பிரதிவாதி வெட்டியதாக வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தமிழ் படிக்க தெரியாது. பேச தெரியும். பொது அதிகார ஆவணத்தில் எங்களது நிறுவனத்தின் மேலாளர் தான் இந்த வழக்கினை நடத்துவதற்கு என்னை நியமனம் செய்து கையொப்பமிட்டுள்ளார். முன்னுக்கு பின் முரணாக செடிகள் வெட்டியது குறித்து தகவல் தெரிவித்துள்ள காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(ஒப்பம்/- S.P.கவிதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Compared by S.Shakila